(உ) கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலை குறித்து

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். நாங்கள் அதைப் பாராட்டுகிறோம். நேற்றைய தினம் தமிழகத்தினுடைய விவசாயிகள்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்கும் ஒரு வரையறையை வைத்துக் கொள்ள வேண்டும். நேற்று அரை மணி நேரம் இதைப்பற்றி எழுப்பி இருக்கிறோம். தமிழ்நாட்டில் 5 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நினைத்துக் கொள்ள வேண்டும். இங்கேயுள்ள கரும்பு விவசாயிகளை மட்டும் நினைக்கிறீர்கள். இந்திய விவசாயிகளையும் மனதில் வையுங்கள். அரை மணி நேரம் பேசியாகிவிட்டது. இந்த அவையில் நீங்கள் மூத்த உறுப்பினர். எனவே தயவு செய்து அமர வேண்டும்.

(முற்பகல் 10-30)

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்லுகிறேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமுமே முதலமைச்சருடைய கவனத்திற்குப் போகிறது. அதனால் தனியாக தெரிவிக்க வேண்டாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : அவர்களே அனுமதி கொடுக்கிறார்களே.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பேச நான்தான் அனுமதி கொடுக்க வேண்டும். உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்புகள்

(அ) சென்னை பேசின் பிரிட்ஜ் குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன் மா. மணிமாறன், பரிதி இளம் வழுதி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "20–3–1986 அன்று சென்னை, பேசின் பிரிட்ஜ் அருகேயுள்ள சிவராஜபுரம், சுந்தராபுரம் ஆகிய குடிசைப் பகுதிகளில்